# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 13: பாபிலோனுக்கு அடிபணிதல்

**தானியேல் 3:1-30**

### நடந்த கதை . . .

நேபுகாத்நேச்சார் சைகை காட்டினார்; ஆயிரக்கணக்கான கருவிகளிலிருந்து இசை முழங்கியது, திரை விலகியது; பொன்னாலான 90 அடி உயரச் சிலை, சூரிய வெளிச்சத் தில் பளபளத்தது. ராஜா கட்டளையிட்டார்; தூரா சமவெளியில் கூடி யிருந்த அதிகாரிகள் அனைவரும் அந்தச் சிலைக்குமுன் விழுந்து பணிந்தார்கள். மகத்துவ ராஜாவின் ஊழியக்காரர்களான மூன்று எபிரெய வாலிபர்கள் தவிர மற்ற அனைவரும் பணிந்தார்கள்.

பெருமிதத்திலும் மனநிறைவிலும் நேபுகாத்நேச்சார் மிதந்தார்; அப்போது, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும்



அவருடைய சிலையைப் பணிய மறுத்த செய்தி வந்தது. தனக்குக் கீழ்ப்படியாத தைரியம் யாருக்குண்டு என்று நினைத்தார் ராஜா. அந்த மூன்று வாலிபர்களும் தன் கட்டளையைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ என்று அவருக்குச் சந்தேகமாக இருந்தது. எனவே அவர்கள் பணிய இன்னுமொரு தருணம் கொடுத்தார்; ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். அக்கினிச்சூளையை ஏழுமடங்கு அதிகச் சூடாக்கும்படி வீரர்களுக்குக் கட்டளை யிட்டார். அக்கினி தீவிரமாக மூட்டப்பட்டது; மூவரையும் கயிற்றால் இறுகக்கட்டினார்கள். அக்கினிச் சூளைக்குள் அந்த மூவரையும் எறிந்தவர்கள் கரிந்துபோனார்கள்; அந்த அளவுக்கு வெப்பம் அதிகமாக இருந்தது.

எரிந்துகொண்டிருந்த அக்கினிச் சூளைக் குள் ராஜா உற்றுப்பார்த்தார். நடுங்கிய குரலில், ''மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர் களாக அக்கினியிலே போடுவித்தோம்' என்று கேட்டார். அவருடைய மந்திரிமார்களும், ''ஆமாம்'' என்றார்கள்.

உடனே ராஜா, ''இதோ, நாலு பேர் விடுதலையாய் அக்கினி யின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பா யிருக்கிறது'' என்று சொன்னார். தானியேல் 3:25.

அந்த மூன்று வீர வாலிபர்களும் இயேசுவின் சத்தியத்தில் உறுதியாக நின்றார்கள்; அந்த அக்கினிச் சூளையிலிருந்து தேவன் அவர்களை விடுவித்தார்.

கடைசி நாட்களில், இதுபோல் ஒரு சோதனையை தேவபிள்ளை கள் எதிர்கொள்ள வேண்டியது வரும்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

## 1. தானியேல் 3 இன் சம்பவம் வெளிப்படுத்தலோடு எவ்வாறு ஒத்திருக் கிறது?

**வெளிப்படுத்தல் 13:15.** *மிருகத்தின் ____________________ வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாக … அதற்குச் சத்துவங் கொடுக்கப்பட்டது.*

**குறிப்பு:** கடைசி நாட்களில், மனச்சாட்சிக்கு விரோதமாக ஆராதனைசெய்ய அல்லது மரணத்தைச் சந்திக்க தேவமக்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள். தேவ கற்பனைக்குக் கீழ்ப்படிவதா, அல்லது மனிதரின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதா என்று அவர்கள் தீர்மானித்தாக வேண்டும்.

## 2. வெளிப்படுத்தல் 14இலுள்ள முத்தூது என்ன?

**வெளிப்படுத்தல் 14:7.** *தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் ____________________ ________________ வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள்.*

**வெளிப்படுத்தல் 14:8.** *வேறொரு தூதன் பின்சென்று, "________________ மகாநகரம் ________________! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே!" என்றான்.*

**வெளிப்படுத்தல் 14:9,10.** *________________ அதின் சொரூபத்தையும் ________________ தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து … வாதிக்கப்படுவான்.*

**குறிப்பு:** கடைசி நாட்களில், நம்பிக்கையையும் எச்சரிப்பையும் தரும் இந்த முத்தூதானது மக்களை இயேசுவின் வருகைக்காக ஆயத்தம்பண்ணும்படி உலகம் முழுவதிற்கும் பிரசங்கிக்கப்படு மென்று வெளிப்படுத்தல் 14:6–14 சொல்கிறது. மிருகத்தை வணங்கி, அதன் முத்திரையைப் பெறவேண்டாமென்று அதில் ஒரு தூது எச்சரிக்கிறது. இந்தப் பாடத்தில் அந்த மிருகம் எது வென்று ஆராய்வோம். இது நித்திய வாழ்க்கை சம்பந்தப்பட்டது; எனவே, தேவனுடைய வழி நடத்துதலுக்காகவும் அறிவுக்காகவும் ஜெபிக்கவும்.

## 3. வேதாகமத் தீர்க்கதரிசனங்களில் மிருகம் எதை அடையாளப்படுத்துகிறது?

**தானியேல்7:17.** *அந்த நாலு பெரிய ________________ பூமியிலிருந்து எழும்புகிற நாலு ________________.*

**தானியேல்7:23.** *நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ______________.*

**தானியேல்8:21.** *அந்த வெள்ளாட்டுக்கடா கிரேக்கு தேசத்தின் ________________.*

**குறிப்பு:** வேதாகமத் தீர்க்கதரிசனத்தில் மிருகம் என்பது ஓர் அரசாங்கம் அல்லது அரசியல் வல்லமையைச் சுட்டிக்காட்டுகிறது. இன்றும்கூட, அமெரிக்காவுக்குக் கழுகு, ரஷியாவிற்குக் கரடி போன்ற அடையாளங்கள் பயன்படுத்தப்படுவதுபோல, தேவனும் அரசுகளைச் சுட்டிக் காட்ட மிருகங்களைப் பயன்படுத்தியிருக்கிறார். வேதாகமத்தில், 'மிருகம்' ஒரு அவமரியாதைச் சின்னமாகப் பயன்படுத்தப்படவில்லை. மிருகத்தின் குணநலன்களையும் அது சுட்டிக்காட்ட வில்லை. மிருகத்தின் முத்திரை பற்றி வெளி 13:1–10; 15–18 ஆகிய வசனங்களில் சொல்லப் பட்டுள்ளது. 4 ஆம் கேள்வியைப் பார்க்குமுன் இந்த வசனங்களை நன்றாக வாசித்துவிடுங்கள்.

## 4. அந்த மிருகம் எப்படி இருந்ததென்று வேதாகமம் கூறுகிறது?

**வெளிப்படுத்தல் 13:1.** *பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு ______________எழும்பிவரக் கண்டேன்;*

*அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின் மேல் பத்துமுடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.*

**குறிப்பு:** வெளிப்படுத்தல் 13:1–10; 15–18 வசனங்களில் மிருகத்தைக் கண்டுபிடிக்க தேவன் 10 தகவல்களைக் கொடுத்திருக்கிறார். மிருகத்தின் குணநலன்கள்பற்றிய ஒரு நீண்ட பட்டியல் அதைச் சரியாக அடையாளங்காண உதவுகிறது.

- தகவல் 1 – சமுத்திரத்திலிருந்து எழும்புகிறது. (வச 1)
- தகவல் 2 – வலுசர்ப்பத்திடமிருந்து அதிகாரம், சிங்காசனம், வல்லமை பெறுகிறது. (வச 2)
- தகவல் 3 – உலகளாவிய ஒரு வல்லமையாக மாறுகிறது. (வசனங்கள் 3, 7)
- தகவல் 4 – அது தேவதூஷணம் பேசியது. (வசனங்கள் 1, 5, 6)
- தகவல் 5 – 42 தீர்க்கதரிசன மாதங்கள் அது அரசாண்டது. (வச 5)
- தகவல் 6 – சாவுக்கேதுவான காயமடைந்தது; அது குணமாகியது (வச 3)
- தகவல் 7 – அது தொழுகையைப் பெறும் ஒரு மத வல்லமை. (வசனங்கள் 4,8)
- தகவல் 8 – தேவனுடைய பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தியது. (வச 7)
- தகவல் 9 – 666 எனும் விநோதமான இலக்கத்தைப் பெற்றிருந்தது. (வச 18)
- தகவல் 10 – மேலான அதிகாரமுடைய ஒரு மனிதனாக இருக்கிறது (வச 18)

இந்தப் பத்து அடையாளங்களையும் ஒரே ஒரு வல்லமைதான் மிகச்சரியாகப் பெற்றிருக்கிறது. அது பாப்புமார்க்கம். இது சரிதானாவென்று, 5ஆம் கேள்வியில் ஆரம்பித்து, ஒன்றொன்றாக மிகக் கவனமாக ஆராய்வோம்.

## 5. இந்த மிருகம் சமுத்திரத்திலிருந்து எழுந்தது. சமுத்திரம் அல்லது தண்ணீர் எதைச் சுட்டிக்காட்டுகிறது?

வெளிப்படுத்தல் 17:15. ____________ *கண்டாயே; அவைகள்* ____________ *கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்.*

**குறிப்பு:** தீர்க்கதரிசனத்தில், பெருங்கூட்ட மக்கள், அல்லது மக்கள் கூட்டம் மிகுந்த நிலப்பகுதியைத் தண்ணீர் சுட்டிக்காட்டுகிறது. அப்போது பிரபலமாயிருந்த பிரபல தேசங்களிலிருந்து அந்த மிருகம் எழும்ப இருந்ததாகத் தீர்க்கதரிசனம் முன்னுரைக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் பாப்புமார்க்கம் தலைதூக்கியது; முதல் தகவலுக்கு விடை கிடைத்துவிட்டது. மற்ற ஒன்பது தகவல்களும் இதற்குப் பொருந்துமா?

## 6. மிருகத்திற்கு வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுத்தது யார்?

வெளிப்படுத்தல் 13:2. ____________ *தன்* ____________ *தன்* ____________ *மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.*

**குறிப்பு:** நாம் பெறக்கூடாத முத்திரையைப் பெற்றிருந்த மிருகம் தன் வல்லமையையும், அதிகாரத்தையும், தலைநகரத்தையும் வலுசர்ப்பத்திடமிருந்து பெற்றது. வெளி 12:3–5இன்படி, இயேசு பிறந்தபோது அவரை அழிக்க வகைதேடிய வல்லமை இந்த வலுசர்ப்பம்தான். அஞ்ஞான ரோம சாம்ராஜ்யத்தின் அரசனான ஏரோதுதான், பெத்லகேமில் பிறந்த அனைத்து ஆண்குழந்தைகளையும் கொலைசெய்யும்படிக் கட்டளையிட்டான்; அவனைத் தூண்டியவன் சாத்தான். மத்தேயு 2:13,16. அஞ்ஞான ரோம் யாருக்குத் தன் அதிகாரத்தையும் தலைநகரத்தையும் கொடுத்தது? அஞ்ஞான ரோம் தன் அதிகாரத்தையும் தலைநகரத்தையும் ரோமின் சபைக்குக் கொடுத்ததை வரலாறு தெளிவாகக் கூறுகிறது. பின்வரும் வரலாற்று மேற்கோள் குறிப்பிடத்தக்கது: ரோம உலக சாம்ராஜ்யத்தின் இடத்திற்கு ரோம் சபை சென்றுவிட்டது; இப்போது தொடர்ந்து அதுதான் அதிகாரம் செலுத்துகிறது. போப் தன்னை "போண்ட்டிஃபெக்ஸ் மேக்சிமஸ்" என்று அழைக் கிறார். 'போண்ட்டிஃபெக்ஸ் மேக்சிமஸ்' என்றால், சீசரின் வாரிசு என்று அர்த்தம். எனவே, இரண்டாம் தகவலும் பாப்பு மார்க்கத்திற்குப் பொருந்துகிறது.

Adolph Harnack, What Is Christianity? (New York: Putnam, second edition, Revised, 1901), p. 270.

## 7. மிருகத்தின் செல்வாக்கு எவ்வளவு பெரிதாக இருக்கிறது?

வெளிப்படுத்தல் 13:3. *பூமியிலுள்ள* ____________ *ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி(னார்கள்).*

**குறிப்பு:** மத்தியக் காலங்களில் பாப்புமார்க்கம் ஓர் உலகளாவிய வல்லமையாக இருந்ததை எல்லாரும் அறிவார்கள். 'கத்தோலிக்' என்றாலே 'உலகளாவிய' என்று அர்த்தம். தகவல் மூன்றும் பாப்பு மார்க்கத்திற்குப் பொருந்துகிறது.

## 8. மிருகத்தின் வாயிலிருந்து என்ன வந்தது?

**வெளிப்படுத்தல் 13:6.** *அது தேவனைத்* ____________________ *தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தை ...* ____________________.

**குறிப்பு:** வேதாகமத்தின்படி தேவதூஷணம் என்பது, பாவத்தை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டென்று மனிதன் சொல்வது (லூக்கா 5:21); தன்னை தேவன் என்று சொல்வது (யோவான் 10:33). பாவங்களை மன்னிக்கத் தங்களுக்கு அதிகாரம் உண்டென்று போப்புமார்க்கம் தைரியமாகச் சொல்கிறது. கத்தோலிக்க மதக்குறிப்புப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட சிறு பகுதியைக் கீழே வாசியுங்கள். "சாமியார் உண்மையிலேயே பாவங்களை மன்னிக்கிறாரா அல்லது அவை மன்னிக்கப்பட்டது என்றுமாத்திரம் சொல்கிறாரா?" "போதகர் கிறிஸ்து தனக்குக் கொடுத்திருக்கும் வல்லமையின் நிமித்தம் உண்மையாகவே, மெய்யாகவே பாவங்களை மன்னிக்கிறார்"[1]. போப்பாண்டவர் தேவனுக்குச் சமமானவர் என்றும் போப்புமார்க்கம் கூறுகிறது. எட்டாம் போப் லியோ, "நாங்கள் (போப்புமார்கள்) இந்தப் பூமியில் சர்வவல்ல தேவனுக்கு இணையாக இருக்கிறோம்"[2]. போப்பைப்பற்றி, "நீர் பூமியிலிருக்கும் இன்னொரு தேவன்" என்கிறார்கள்[3]. எனவே, 4ஆம் தகவலும் போப்பு மார்க்கத்திற்கு ஒத்துப்போகிறது.

1 Joseph Deharbe, S.J., A Complete Catechism of the Catholic Religion (New York: Schwartz, Kirwin & Fauss, 1924), p. 279.
2 Christopher Marcellus, Oration in the Fifth Lateran Council, Session IV (1512), manuscript SC, Vol. 32, col. 761 (Latin).
3 Pope Leo XIII, Encyclical Letter "The Reunion of Christendom," dated June 20, 1894, trans. in The Great Encyclical letters of Pope Leo XIII (New York: Benziger, 1903), p. 304.

## 9. முதலாம் மிருகம் எத்தனை காலம் அரசாள இருந்தது?

**வெளிப்படுத்தல் 13:5.** ________________________________ *மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.*

**குறிப்பு:** மிருகம் ஆட்சிசெய்த காலக்கட்டமானது மூன்றரை வருடங்கள், 42 மாதங்கள் அல்லது 1,260 நாட்கள் என்று மீண்டும்மீண்டும் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்படுகிறது. யூதர்களின் 30–நாள் காலண்டரை வைத்துப்பார்த்தால், மூன்று காலக்கட்டங்களுமே 1,260 தீர்க்கதரிசன நாட்களைச் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு தீர்க்கதரிசன நாள் என்பது, ஒரு வருடத்திற்குச் சமம். (எசேக்கியேல் 4:6). எனவே, 1260 நாட்கள் என்பது 1260 வருடங்கள். பேரரசர் ஜஸ்டினியன் உத்தரவுப்படி, போப்பு மார்க்கத்திற்கு உச்ச அதிகாரம் வழங்கப்பட்டதை யாரும் எதிர்க்கவில்லை. எனவே, கி.பி. 538இல் போப்புமார்க்க ரோம் அதிகாரப்பூர்வ அந்தஸ்தைப் பெற்றது. நெப்போலியன் வழிகாட்டலில் தளபதி அலெக்ஸாண்டர் பெர்தியர் 1798இல் போப்பைக் கைதுசெய்தபோது போப்புமார்க்கத்திற்கு ஒரு பலத்த அடி விழுந்ததுபோல் இருந்தது. கி.பி. 538க்கும் கி.பி. 1798க்கும் இடையேயான காலக்கட்டம் 1260 வருடங்கள். எனவே, 5ஆம் தகவலும் போப்புமார்க்கத்திற்கு ஒத்துப்போகிறது.

## 10. 42 மாதங்களுக்குபிறகு அந்த மிருகத்திற்கு என்னவானது?

**வெளிப்படுத்தல் 13:3.** *அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும்* ________________________ *அந்தக்* ______________ *சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி(னர்).*

**குறிப்பு:** 1798இல் போப்பை அலெக்ஸாண்டர் பெர்தியர் கைதுசெய்து, சிறைப்பிடித்துச் சென்றார்; நாடுகடத்தப்பட்ட நிலையில் போப் இறந்தார்; அது போப்புமார்க்கத்திற்கு ஒரு பலத்த அடிபோல் தோன்றியது.[1] போப்புமார்க்கம் முடிந்துபோனதாக பாதி ஐரோப்பா நினைத்தது. ஆனால், அந்தக் காயம் ஆறிவிடும் என்றும், உலகம் அனைத்துமே அதைப் பின்பற்றும் அளவிற்கு அதன் செல்வாக்கும் வல்லமையும் அதிகரிக்கும் என்றும் தேவன் சொல்லியிருந்தார். வாட்டிகன் இன்சைடர் செய்தியங்கத்தின் தலைசிறந்த நபரான மலாகி மார்டின் ***The Keys of This Blood*** எனும் தன்னுடைய புத்தகத்தில் பின்வருமாறு கூறுகிறார்: "20ஆம் நூற்றாண்டின் மிகவும் பிரசித்திபெற்ற ஒருவர் போப் (பக்கம் 123), 91 நாடுகளின் தலைவர்களோடு தனிப்பட்ட உறவை வளர்த்துள்ளார். (பக்கம் 490). உலகம் முழுவதையும் அரசாள இப்போது ஆயத்தமாக இருக்கிறார் (பக்கம் 143)"[2]. போப்புமார்க்கம்தான் பல விதங்களில் பூமியிலேயே மிகவும் செல்வாக்கு மிக்கது என்று சாதாரணக் கற்றுக்குட்டிகூட புரிந்துகொள்ளலாம். போப் ஒவ்வொரு பயணம் மேற்கொள்ளும்போதும், அவருடைய செல்வாக்கும் அதிகாரமும் வளருகிறது. தேவன் முன்னுரைத்தது போலவே, உலக அமைதியையும் சமாதானத்தையும் ஒப்புரவையும் ஏற்படுத்தக்கூடிய ஒரே நபரர் போப்புதான் என்று உலகம்முழுவதிலும் கோடிக்கணக்கானோர் எதிர்பார்க்கிறார்

கள். 6ஆம் தகவலும் போப்புமார்க்கத்திற்குப் பொருந்துகிறது.

---

1 Joseph Rickaby, "The Modern Papacy," Lectures on the History of Religion, (London: Catholic Truth Society, 1910), Vol. 3, Lecture 24, p. 1.

2 Malachi Martin, The Keys of This Blood (New York: Simon & Schuster, 1990).

## 11. அந்த மிருகம் ஒரு மதவல்லமையா?

**வெளிப்படுத்தல் 13:15.** *மிருகத்தின் சொரூபத்தை ______________________ யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும் ... சத்துவங்கொடுக்கப்பட்டது.*

**குறிப்பு:** இந்த அமைப்பு ஆவிக்குரிய விஷயங்களில் தலையிடுமென்று தெளிவாகக் கூறுகிறது.

## 12. அந்த மிருகம் பரிசுத்தவான்களை என்ன செய்கிறது?

**வெளிப்படுத்தல் 13:7.** *பரிசுத்தவான்களோடே ______________________ அவர்களை ______________________ அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.*

**குறிப்பு:** மத்திய காலங்களில்தான் பாப்புமார்க்கம் உச்ச அதிகாரத்தில் இருந்தது. குறிப்பாக அந்தக் காலக்கட்டத்தில் அது மனச்சாட்சியுள்ள கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, அழித்தது என்பது ஊரறிந்த விஷயம். அந்த மகா உபத்திரவக் காலத்தில் 5 கோடிக்கும் அதிகமானோர் தங்கள் விசுவாசத்தின்நிமித்தம் மரித்தார்களென்று வரலாறு கூறுகிறது. 'மதத்துரோகத்தை' அகற்றி, தேவனுக்குத் தொண்டுசெய்வதாக சபை நினைத்தது. சபையின் அக்கிரமச்செயல்களுக்காக போப் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். ஆனால், அது உபத்திரவப்படுத்தி, அழித்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. 8ஆம் தகவலும் பாப்புமார்க்கத்திற்குப் பொருந்துகிறது.

## 13. அந்த மிருகத்திற்கு அடையாளமாயிருந்த அந்த விசேஷ இலக்கம் என்ன?

**வெளிப்படுத்தல் 13:18.** *அதினுடைய இலக்கம் ______________________.*

**குறிப்பு:** மிருகத்தின் பெயரிலுள்ள இலக்கத்தை எண்ணும்படியும், அது மனுஷனுடைய இலக்கம் என்றும் வெளிப்படுத்தல் 13:18 இல் தேவன் கூறுகிறார். பாப்புமார்க்கம் என்றதுமே நம் நினை விற்கு வருவது போப்புதான். அவருடைய பெயர் என்ன? போப்பின் அதிகாரபூர்வ பட்டப்பெயர் ஒன்று "தேவ குமாரனின் பதிலாளி" என்பதாகும். அதை லத்தீன் மொழியில் (சபையின் அதிகாரபூர்வ மொழி) "வைக்கேரியஸ் ஃபிலை டீயி (Vicarius Filii Dei)" என்பார்கள். செய்தித்தாள் கட்டுரைகளில் "கிறிஸ்துவின் பதிலாளி" என்று போப்புவைக் குறிப்பிடும்போது, அவருடைய பட்டத்தின் மொழிபெயர்ப்பு என்று காட்டுவதற்காக, அதற்கான லத்தீன் வார்த்தை களை அடைப்புக்குறிகளுக்குள் போட்டிருப்பார்கள். அந்தப் பெயரிலுள்ள ரோம எழுத்துகளின் கூட்டுத்தொகை 666 என்று வெளிப்படுத்தல் புத்தகம் கூறுகிறது. தகவல் 9, பாப்புமார்க்கத் திற்கு ஒத்துப்போகிறதா இல்லையா என்று பார்ப்போம்.

**புத்தி உடையவன் கணக்குப் பார்க்கக்கடவன். வெளி 13:18**

| | |
|---|---|
| V | 5 |
| I | 1 |
| C | 100 |
| A | 0 |
| R | 0 |
| I | 1 |
| U | 5 |
| S | 0 |
| | 112 |

| | |
|---|---|
| F | 0 |
| I | 1 |
| L | 50 |
| I | 1 |
| I | 1 |
| | 53 |

| | |
|---|---|
| D | 500 |
| E | 00 |
| I | 1 |
| | 501 |

666

| | |
|---|---|
| VICARIUS = | 112 |
| FILII = | 53 |
| DEI = | 501 |
| மொத்தம் = | 666 |

இதில் சந்தேகமே வரக்கூடாது. வெளிப்படுத்தல் 13:1–8, 15–18 இல் சொல்லப்பட்டுள்ள பத்து தன்மைகளும் பாப்புமார்க்கத்திற்கு பொருந்துவதாகக் காட்டினோம். இந்த வல்லமை ஒரு குறிப்பிட்ட முத்திரையைப் பெற்றிருக்கிறது; அதை நாம் பெறவே கூடாது.

பக்தியுள்ள, நல்லவர்களான ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் பலர் இருக்கிறார்கள்; தேவன் அவர்களைத் தம் பிள்ளைகளாகவே கருதுகிறார். துணிவும் கருணையும் நிறைந்த, தேவனை நேசிக்கிற போப்புகள் பலரும் இருக்கிறார்கள். கத்தோலிக்க நண்பர்களே, இந்தப் பாடம் உங்களைத் தாக்குவதற்காக அல்ல. வேதாகமச் சத்தியத்தைவிட்டு, சபைகளை மயக்கி இழுத்துச்செல்லும் பிசாசைத்தான் தாக்குகிறோம். ஆனாலும், நாம் பெற்றுக்கொள்ளத் தகாத ஒரு முத்திரை இந்த அமைப்பில் இருப்பதாக தேவன்தாமே சொல்லியிருக்கிறார். அந்த முத்திரை எது என்பதை அறிந்துகொள்ள உண்மையுள்ள புரொட்டஸ்டண்ட், கத்தோலிக்க, யூத மதத்தினரும் கிறிஸ்தவரால்லாதவர்களும் ஆவலோடிருக்கலாம். நம் அனைவரையும் அழிப்பதற்குச் சாத்தான் வகுத்துள்ள மோசமான திட்டங்களை தேவன் தம் வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ளதால் அவரை ஸ்தோத்தரிப்போம்.

அடுத்த பாடத்தில், மிருகத்தின் ‘முத்திரையை’ நாம் தெளிவாக அடை யாளம் காண்போம். மிருகத்தின் முத்திரையை நீங்கள் பெற்றால் இரட்சிப்பை இழந்துவிடுவீர்கள். அந்த முத்திரையைப் பெறாமல் இருப்பதற்கு ஒரு பெரிய போராட்டத்தை எதிர்கொண்டாக வேண்டும் என்பதை அநேகர் கண்டுகொள்வார்கள். தேவனுக்குக் கனமுண்டாகும்விதத்தில் மரிக்கவும் ஆயத்தமாக இருந்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் விசுவாசத்தை தேவன் நமக்குத் தரமுடியும்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

நீங்கள் உங்கள் நண்பர்களை இழக்க நேரிட்டாலும், இயேசு உங்களை வழிநடத்திச் செல்லும் இடங்களுக்கெல்லாம் செல்ல ஆயத்தமாக இருக்கிறீர்களா?

**பதில்:** ______________________________

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com